**சுருக்கம்**

தொழில் நுட்பக் கல்வித் துறை – 2011–2012 ஆம் ஆண்டில் அரசினர் பொறியியல் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசினர் சிறப்புப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு மூலம் பொது மாறுதல் அளித்தல் – நெறிமுறைகள் நிர்ணயித்திடல் மற்றும் இடமாற்றம் குறித்த கலந்தாய்வு நடத்திக் கொள்ள தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்கு அதிகாரம் வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (சி2) துறை

அரசு ஆணை (வாலாயம் ) எண்.172 நாள்: 10.06.2011

வைகாசி–27

திருவள்ளுவர் ஆண்டு.2042

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (வாலாயம்) எண்.70, உயர்கல்வித் துறை, நாள் 21.5.2010.
2. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.14060/ஏ1/ 2011, நாள் 26.4.2011.

------

**ஆணை**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசினர் பொறியியல் கல்லூரிகள் / அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசினர் சிறப்பு பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 2010-2011ஆம் ஆண்டில் கலந்தாய்வு மூலம் (Counselling) பணியிட மாற்றங்களுக்கான அனுமதியும் அதற்கான நெறிமுறைகளையும் வரையறுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. 2011—2012ஆம் ஆண்டிற்கு அரசினர் பொறியியல் கல்லூரிகள் / அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசினர் சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிட மாற்றம் செய்யவும் அவ்வாறு பணியிட மாற்றம் செய்யும் போது சில நெறிமுறைகளை கடைபிடிக்கலாம் எனவும் அதனடிப்படையில் அனுமதி அளித்தும் அரசாணை வழங்கிட மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கீழ்க்காணும் கருத்துருவினை தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசிற்கு அனுப்பியுள்ளார்:–

(i) மூன்று வருடங்களுக்கு மேல் அரசுப் பணியாளர்கள் ஒரே பணியிடத்தில் பணியாற்றக் கூடாது என்ற பொதுவான ஆணையானது, பொறியியல் கல்லூரி / பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்புத் தொழில்நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் பணிபுரியும் பணியிடங்கள் நிர்வாகப் பணியிடங்கள் அல்ல என்பதால் மேற்கூறிய ஆணை கடைபிடிக்கப்பட்டு வருவதில்லை. இதே முறையைத் தொடரலாம்.

(ii) பணி ஓய்வு, பணித் துறப்பு, பணி நீக்கம், பதவி உயர்வு, மரணம், புதிய பணியிடங்கள் உருவாக்கப்படுதல் மற்றும் நிர்வாகக் காரணங்கள்

போன்ற இனங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மட்டும், பொது மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். ஒரு ஆசிரியருக்கு மாறுதல் தருவதற்காக, எக்காரணத்தைக் கொண்டும் மற்றொரு ஆசிரியரை மாறுதல் செய்யக் கூடாது.

(iii) ஆசிரியர்களிடமிருந்து பணியிட மாறுதல் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் குறித்து, தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அலுவலகத்தின் தகவல் பலகையில் கீழ்க்காணும் தகவல்கள் வைக்கப்பட வேண்டும்:-

(அ) நிரப்பத் தகுதியுள்ள காலிப் பணியிடங்களின் பட்டியல்.

(ஆ) இட மாறுதல் கேட்டுள்ள ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் மாறுதல் கோரியுள்ள பொறியியல் கல்லூரி/பாலிடெக்னிக் கல்லூரியின் பெயர்கள்.

(இ) மாறுதல் நெறிமுறைகள்:

3. தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அலுவலகத்தில் விளம்பரப்படுத்தப்பட்ட பணியிடங்களுக்கு பொது மாறுதல் குறித்து பெறப்படும் விண்ணப்பங்கள், அலுவலகத்தின் உரிய பதிவேட்டில் வரிசைக் கிரமத்தில் பதிவு செய்யப்பட்டு, அதற்கான உரிய எண்ணுடன், ஒப்புகையும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

4. ஒரு காலிப் பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட நெறிமுறைகளைக் கையாண்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் :-

(i) இராணுவத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கணவன்/ மனைவியர்;

(ii) (அ) மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு உடல் ஊனமுற்றவர்கள், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு ஊன்றுகோல் துணையுடன் (using calipers) மெதுவாகச் செல்லக்கூடிய நிலையில் உள்ள ஊனமுற்றவர்கள்;

(ஆ) இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்;

(இ) கடுமையாகப் பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்

(iii) விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர் கன்னியர்.

(iv) ஒரே இடத்தில் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள், அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்.

(v) கணவன், மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள், எனினும் ஏற்கனவே ஒரு தம்பதியினர் (கணவன்/மனைவி) 20 கி.மீ. சுற்றளவு தூரத்தில் உள்ள இடத்தில் பணிபுரியும் பட்சத்தில் அவர்களை separation எனக் கருதி, கணவன் மனைவி முன்னுரிமை அளிக்கப்படமாட்டாது. ஒருமுறை கணவனோ அல்லது மனைவியோ கலந்தாலோசனை நிகழ்வு மூலமாக மாறுதல் பெற்றவர்கள், மீண்டும் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு மாறுதலுக்கு விண்ணப்பிக்கக் கூடாது. கணவன் மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும் போது, அந்த மாறுதல் கோரும் இடமானது கணவனோ, மனைவியோ பணிபுரியும்

இடத்திலிருந்து அதே மாவட்டத்திற்குள்ளோ அல்லது குறைந்தது 40 கி.மீ. சுற்றளவிற்குள்ளோ இருத்தல் வேண்டும். கணவன் மனைவி என்ற முன்னுரிமை மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், அரசுப்பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்பட வேண்டும். இதில் மைய அரசு / மாநில அரசு/ பொதுத்துறை நிறுவனம் என்ற பாகுபாடு கிடையாது.

(vi) மேற்சொன்ன முன்னுரிமையில் ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் மாறுதல்கள் கோரியிருப்பின், அன்னார் தற்போதுள்ள பணியிடத்தில் பணிபுரியும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, அதிக காலம் பணிபுரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(vii) (அ) பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் ஊட்டி, எட்டையபுரம், அறந்தாங்கி, கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மூன்றாண்டும், அதற்கு மேலும் பணிபுரியும் ஆசிரியர்கள், அவர்கள் விரும்பும் பிற இடங்களுக்கு பணியிட மாற்றம் கோரும் போது, அவர்கள் விருப்ப மாற்றம் கோரிய இடங்களில் பணிபுரியும் தல முதுநிலையிலுள்ள ஆசிரியர்களை (Station Senior) மாற்றி அதனால் ஏற்படும் காலியிடங்களுக்கு மாறுதல் வழங்கலாம். அவ்வாறு தல முதுநிலையில் உள்ள ஆசிரியர் ஏற்கனவே மேற்படி கல்லூரி மற்றும் பயிலக கல்லூரிகளில் (பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் ஊட்டி, எட்டையபுரம், அறந்தாங்கி, கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் பலதொழில் நுட்பப் பயிலகக் கல்லூரி) பணிபுரிந்திருப்பாரேயானால் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள ஆசிரியரை பணியிட மாற்றம் செய்யலாம். அனைத்து ஆசிரியர்களும் மேற்படி கல்லூரி மற்றும் பயிலக கல்லூரிகளில் ஏற்கனவே பணிபுரிந்திருப்பார்களேயானால் சுழற்சி அடிப்படையில் அவர்களின் முதுநிலை கணக்கிடப்பட்டு அவர்களை பணிமாறுதல் செய்யலாம்.

(ஆ) ஓய்வு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளோ, அதற்குக் குறைவாகவோ இருந்தால், அவர்களுக்கு இடமாற்றத்திலிருந்து விலக்களித்து, அவர்களுக்கு அடுத்ததாக வரும் தல முதுநிலையிலுள்ள (Station Senior) ஆசிரியர்களை அப்பயிலகங்களுக்கு / பொறியியல் கல்லூரிகளுக்கு மாற்ற அனுமதி வழங்கலாம்.

(இ) பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் ஊட்டி, எட்டையபுரம், அறந்தாங்கி, கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இடமாறுதல் வழங்கும் நிகழ்வில் ஆண்டுதோறும் மேற்படி நிலை ஏற்படுமென கருதப்படுவதால், சென்னை, மதுரை, கோவை மற்றும் நாகர்கோவில் போன்ற மாவட்டத் தலைமையிடங்களில் பணிபுரியும் தல முதுநிலையிலுள்ள (Station Senior) ஆசிரியர்களை மாற்றுவதற்கு தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாவட்டத் தலைமையிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மேற்படி மாறுதல் வழங்குவதால் பயணப்படி விதிகளின்படி மாறுதல் பயணப்படி வழங்கப்படும்.

(viii) அரசினர் பொறியியல் கல்லூரிகள் / அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் / அரசு சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்களது பதவி உயர்வு போன்ற காரணங்களுக்காக, உயர்கல்வி (M.E.) போன்ற படிப்பினைத் தொடருவதற்கேதுவாக, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளுக்கு / பயிலகங்களுக்கு பணியிட மாற்றம் கோருகின்றனர். உயர்கல்வி பெறுதல் காரணத்திற்காக, பணியிட மாற்றம் கோரும் இடங்களில் அதிக ஆண்டுகள் பணிபுரியும் தல முதுநிலையிலுள்ள (Station Senior) ஆசிரியர்களை வேறு பொறியியல் கல்லூரிகளுக்கு / பயிலகங்களுக்கு மாற்றுவதால் ஏற்படும் காலியிடங்களில் உயர்கல்வியின் பொருட்டு மாறுதல் கோருபவர்களுக்கு பணியிடம் வழங்கப்படும்.

5. <u>கலந்தாய்வு (Counselling) மூலம் மாறுதல்கள் வழங்கும் முறை:-</u>

(i) மாறுதல்கள் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் மேலே பத்தி 4-ல் கண்ட முன்னுரிமையின்படி, தயாரிக்கப்படும். அதன்அடிப்படையில், சென்னையில் மட்டும் கலந்தாய்வு நடத்தலாம். இந்த கலந்தாய்விற்கு வரும், இடப்பெயர்வு கோரும் ஆசிரியர்களுக்கு, தகுதியுள்ள காலிப் பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து, அவர்கள் விரும்பிய இடத்தில் காலிப் பணியிடம் இருப்பின் மாறுதல் அளிக்கப்படும். இவ்வாறு மாறுதல் வழங்கும்போது, மாறுதலால் ஏற்படும் காலிப் பணியிடத்தையும், அவ்வப்போது பட்டியலில் சேர்த்து அடுத்து முன்னுரிமைப்படி வரும் தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்களின் விருப்பத்தினைப் பெற்று, மாறுதல்கள் வழங்கப்படும். மேற்படி முறையால் விண்ணப்பத்தில் குறிப்பிடாத பொறியியல் கல்லூரிகளில் / தொழில் நுட்பப் பயிலகங்களில் காலிப் பணியிடம் இருந்து, அதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்தால் வழங்கப்படும் மாறுதல் ஆணைகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்த விவரம் கலந்தாய்வு மையத்தின் அறிவிப்பு பலகையில் தெளிவாக வெளியிடப்பட வேண்டும்.

(ii) கலந்தாய்வு முடிந்தவுடன், அம்மையத்திலேயே மாறுதல் உத்தரவு அளிக்கப்பட வேண்டும். அனைத்து இடப் பெயர்வுகளும் ஜுன் மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும். அதற்குபின் நடக்கும் கலந்தாய்வு பொது மாறுதலானது பதவி உயர்வினால் அல்லது ஏற்கக் கூடிய காரணங்களினால் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மட்டுமே நடைபெற வேண்டும், கலந்தாய்வில் பங்கேற்கும் ஆசிரியர்கள், தங்கள் சொந்தச் செலவிலேயே கலந்து கொள்ள வேண்டும்.

6. <u>நிர்வாகக் காரணங்களுக்கான மாறுதல்:-</u>

(i) நிர்வாகக் காரணம் என்பது சம்பந்தப்பட்ட பணியாளர் மீது புகார் பெறப்பட்டு, அந்தப் புகார் உரிய அலுவலரால் விசாரிக்கப்பட்டு, புகாருக்கு முதல்நிலை ஆதாரம் உள்ள வழக்குகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்ட வழக்குகள் காரணமாக செய்யப்பட வேண்டிய மாறுதல்கள் ஆகும். மேற்கண்ட நிர்வாகக் காரணங்களுக்காக செய்யப்படும் மாறுதல் தொழில் நுட்பக் கல்வி ஆணையரால் செய்யப்படலாம். இவ்வாறு

நிர்வாகக் காரணத்திற்காக செய்யப்படும் மாறுதல்கள், எதற்காக செய்யப்பட்டது என்பதை கோப்பில் குறிப்பிட்டு அளிக்கப்பட வேண்டும்.

(ii) விசாரணை அதிகாரியின் அறிக்கையின் பேரிலோ அல்லது ஆதாரங்களின் அடிப்படையிலோ தொழில் நுட்பக் கல்வி ஆணையரால் இந்த நிர்வாக மாறுதல்கள் செய்யப்படும்.

(ii) பொது நலன் கருதியும், பொறியியல் கல்லூரி / பாலிடெக்னிக் கல்லூரி அமைந்துள்ள பகுதியிலுள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதியும் மற்றும் மாணவர்களின் கல்வித்திறன் கருதியும் துறைத் தலைவர்கள் அவசியமெனக் கருதினால் உரிய நிர்வாக மாறுதல்களை மேற்கொள்ளலாம்.

7. கலந்தாய்வு (Counselling) முறையில், ஆசிரியர்கள் பொது மாறுதலின் போது கீழ்க்காணும் நிபந்தனைகளையும் அலுவலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்:-

(i) புதிதாகப் பணியில் சேர்ந்தவர்கள் குறைந்தது ஒரு முழுக்கல்வி ஆண்டாவது பணியில் சேர்ந்த இடத்தில் பணிபுரிந்திருந்தால் மட்டுமே மாறுதல் கோர தகுதி பெறுவார்கள்.

(ii) நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றப்பட்டவர்கள், சுமார் மூன்றாண்டுகளுக்கு மாறுதலுக்கு விண்ணப்பிப்பதோ அல்லது மாறுதலுக்கான கலந்தாய்வு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவோ அனுமதிக்கப்படமாட்டாது.

(iii) ஒருமுறை நேர்காணல் மூலமாக மாறுதல் பெற்றவர் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு மாறுதலுக்கு விண்ணப்பிக்க இயலாது. பதவி உயர்வில் சென்றவர்களுக்கு, இக்கால நிர்ணயம் பொருந்தாது.

(iii) சென்னை நகரத்திலுள்ள அனைத்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் அரசு சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்கள் இடமாற்றத்தைப் பொறுத்த வரை, ஒரே அலகாகக் கருதப்படும்.

(iv) ஆடவர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ஒரு துறையில் ஒரு மகளிர் ஆசிரியர் மட்டுமே பணிபுரியும் நிலையில், அன்னாரின் விருப்ப மாறுதல் கோரிக்கை பரிசீலிக்கப்படமாட்டாது.

(vi) மனமொத்த மாறுதல்களைப் பொறுத்தமட்டில் பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் செய்து முடிக்க வேண்டும். ஆண்டின் இடையில் எப்பொழுது கேட்டாலும் பரிசீலித்து ஆணை வழங்கலாம்.

8. ஆசிரியப் பணியிட மாறுதல்கள் கலந்தாய்வு (Counselling) முறையில் அவ்வாசிரியப் பெருமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாறுதல் செய்யப்படுவதால் “மாறுதல் பயணப்படி” போன்ற எந்தவிதச் செலவினமும் அரசிற்கு ஏற்படக் கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது. இந்த நிபந்தனை பத்தி 4 இனம் (vii) (இ) உள்ள நிகழ்வுக்கு மட்டும் பொருந்தாது.

9. வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்ட பின்பு கலந்தாய்வு குறித்த கால அட்டவணை தயாரிக்கப்பட்டு, அவ்விவரம் அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அனைத்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசு சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களின் முதல்வர்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

10. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் மேற்கண்ட கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.484, உயர்கல்வித் துறை, நாள் 8.9.2004இல் கல்லூரிக்கல்வி ஆசிரியர்களின் பொது மாறுதல்களுக்கு வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன், காலிப்பணியிட விவரங்களை மின்னணுதிரையில் (Electronic Screen) காட்சிப்படுத்தப்படல் வேண்டும் என ஆணையிட்டுள்ளதுபோல, தொழில் நுட்பக் கல்வித்துறை சார்ந்த அரசினர் பொறியியல் கல்லூரிகள்/பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் மாறுதல் குறித்த கலந்தாய்விலும், மேலே பத்தி 2 முதல் 11 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன், பொறியியல் கல்லூரிகளுக்கான கலந்தாய்வுபோல பொதுமாறுதல் குறித்த காலிப்பணியிட விவரங்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்கக தொழில் நுட்பத்துடன் முழுமையாக மின்னணுதிரையில் (Electronic Screen) காட்சிப்படுத்தப்பட்டு கலந்தாய்வு நடத்தப்படல் வேண்டும் என முடிவெடுத்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

11. மேற்கண்ட இடமாறுதல் நெறிமுறைகள் குறித்து உடனடியாக தக்க மேல் நடவடிக்கை எடுக்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
<u>நகல்</u>:–
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
உயர்கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் (ஐ/பி/ஜெ/எப்/ஜி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.